**செய்தி வெளியீடு எண்: 839** **நாள்: 26.11.2019**

**விழுப்புரத்தில் சட்டக்கல்லூரி வளாகத் திறப்பு விழா**
**டாக்டர் எம்.ஜி.ஆர். மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி**
**புதிய கட்டடத் திறப்பு விழா மற்றும் விழுப்புரம் நகராட்சி நூற்றாண்டு விழாவில்**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்கள்**
**ஆற்றிய உரை – 26.11.2019**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,**

விழுப்புரத்தில் சட்டக் கல்லூரி வளாக திறப்பு விழா, டாக்டர் எம்.ஜி.ஆர். மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி புதிய கட்டடத் திறப்பு விழா மற்றும் விழுப்புரம் நகராட்சி நூற்றாண்டு விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

**“சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்**
**கோடாமை சான்றோர்க் கணி”.**

நேராக நின்று சரியான எடை காட்டும் தராசின் முள்ளைப்போல், நடுநிலைமையோடு வாழ்வதே சான்றோர்க்கு அழகாகும் என்றார் தெய்வப் புலவர் திருவள்ளுவர். திருவள்ளுவரின் இந்த வாக்கு நீதித் துறைக்கு மிகவும் பொருத்தமாகும். மக்களாட்சியை தாங்கிப் பிடிக்கின்ற நான்கு தூண்களில் நீதித் துறையும் ஒன்று. நாடு அமைதியாகவும், மகிழ்ச்சியாகவும் திகழ்வதில் நீதித் துறையின் பங்கு மகத்தானது. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கொள்கையின் அடிப்படையில் நமது நாட்டில் நீதி நிர்வாகம் இயங்கி வருகிறது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீதி நிருவாகத்தை வலிமையாகக் கட்டமைக்கக்கூடிய இடமாக சட்டக் கல்லூரிகள் விளங்குகின்றன. சட்டக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள்தான், எதிர்காலத்தில் சிறந்த சட்ட வல்லுநர்களாகவும், நீதிபதிகளாகவும் உச்சநிலைக்கு அடைகிறார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தான் நடித்த படங்களுக்கு **'நீதிக்குப் பின் பாசம்', 'நீதிக்கு தலைவணங்கு'** என்று நீதிக்கு பெருமை சேர்க்கும் பெயர்களை வைத்தது, அவர் தர்மத்தின் மீதும், நீதியின் மீதும் வைத்திருந்த நம்பிக்கையை பறை சாற்றுகிறது. தன்னுடைய திரைப்படங்களில் சட்டம், நீதி, நேர்மை, வாய்மை பற்றிய வசனங்களையும், பாடல்களையும் அவர் நிச்சயம் இடம் பெறச் செய்துவிடுவார்.

**'தவிதவிக்கிற ஏழைக்காகத் திட்டம் போடணும் – பொருளை சரிசமமாக பங்கு வைக்க சட்டம் போடணும்'** என்ற பாடல் வரிகளுக்கு ஏற்ப, அவர் முதலமைச்சர் ஆன பிறகு சிறப்பாக ஆட்சி நடத்தியும் காண்பித்தார்.

**''ஏழை மக்களுக்கு அரசியல் அமைப்புச் சட்டம் வழங்கியுள்ள உரிமைகளை உறுதிப்படுத்துவது நமது பொறுப்பாகும்''** என்றார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதற்கு ஏற்ப டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம் தான் ஆசியாவிலேயே மிகக் குறைவான கட்டணத்தில் தரமான சட்டக் கல்வியை வழங்கி வருகிறது.

அம்மாவின் அரசு பொறுப்பேற்பதற்கு முன்னர், அதாவது மே 2011–க்கு முன்னர் தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயமுத்தூர், திருநெல்வேலி, செங்கல்பட்டு மற்றும் வேலூர் ஆகிய 7 அரசு சட்டக் கல்லூரிகள் மட்டுமே தமிழகத்தில் செயல்பட்டு வந்தன.

மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சி பொறுப்பு ஏற்ற பின்னர், தேசிய அளவில் மிகச்சிறந்த சட்டக்கல்வி வழங்கும் பொருட்டு திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் 79 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2012ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளி ஒன்று மாண்புமிகு அம்மா அவர்களால் தோற்றுவிக்கப்பட்டு ஐந்தாண்டு இளநிலை சட்டப்படிப்பு பயிற்றுவிக்கப்படுகிறது.

மாண்புமிகு அம்மாவின் அரசு பொறுப்பேற்றது முதல், சட்டக் கல்விக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், 2017–2018–ஆம் கல்வியாண்டு முதல், விழுப்புரம், தருமபுரி மற்றும் இராமநாதபுரம் ஆகிய

மூன்று மாவட்டங்களில் தலா ஒரு அரசு சட்டக் கல்லூரி துவக்கப்பட்டு, கல்லூரிக்கு ஒன்றுக்கு 2 கோடியே 27 லட்சம் ரூபாய் வீதம் நிதி ஒப்பளிக்கப்பட்டது.

2017–ஆம் ஆண்டில் செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரியில் முதுநிலை சட்டப்படிப்பும், 2017–ஆம் ஆண்டில் வேலூர் அரசு சட்டக் கல்லூரியில் புதிதாக 5 ஆண்டு சட்டப் படிப்பும் தொடங்கப்பட்டது.

மேலும், 2017–2018–ஆம் கல்வியாண்டு முதல் திருச்சிராப்பள்ளி, கோயமுத்தூர், திருநெல்வேலி மற்றும் செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரிகளில் புதிதாக **தமிழ் வழிப் பயிற்று வகுப்புகள்** அறிமுகப்படுத்தப்பட்டது.

நீதியரசர் திரு.பி.சண்முகம் விசாரணை ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில், மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தின் உத்தரவிற்கிணங்க, சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் செயல்பட்டு வந்த சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியினை இடமாற்றம் செய்து 2018–2019–ஆம் கல்வியாண்டு முதல் திருவள்ளூர் மாவட்டம், பட்டறை பெரும்புதூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம், புதுப்பாக்கம் ஆகிய இடங்களில் இரு கல்லூரிகளாக துவக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

2019–2020–ஆம் கல்வியாண்டு முதல் சேலம், நாமக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் 3 ஆண்டு மற்றும் 5 ஆண்டு சட்டப் படிப்புகளுடன் தலா ஒரு அரசு சட்டக் கல்லூரி துவக்கப்பட்டு அக்கல்லூரிகள் செயல்பட்டு வருகிறது.

2019–2020–ஆம் கல்வியாண்டு முதல் புதுப்பாக்கம், விழுப்புரம் மற்றும் தருமபுரி அரசு சட்டக் கல்லூரிகளில் முறையே ‘Climate Change Laws’, ‘Information Technology and Cyber Security Laws’, ‘Corporate Governance Laws’ போன்ற முதுநிலை சட்ட மேற்படிப்புகளும் தொடங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு, இவ்வரசு பொறுப்பு ஏற்பதற்கு முன்னர் இருந்த அரசு சட்டக்கல்லூரிகளின் எண்ணிக்கை 7 என்பது, இரு மடங்காக உயர்த்தப்பட்டு,

தற்போது தமிழ்நாட்டில் மொத்தம் 14 அரசு சட்டக் கல்லூரிகளும், 1 தேசிய சட்டப் பள்ளியும் மற்றும் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகமும் செயல்பட்டு வருகின்றன.

தற்போது செயல்பட்டு வரும் 14 அரசு சட்டக் கல்லூரிகளில் (5 ஆண்டு மற்றும் 3 ஆண்டு) இளநிலை சட்டப்படிப்பில் மொத்தம் 11 ஆயிரத்து 206 மாணவர்களும், முதுநிலை சட்டப்படிப்பில் 420 மாணவர்களும் என மொத்தம் 11 ஆயிரத்து 626 மாணவர்கள் இன்றைக்கு சட்டம் பயின்று வருகின்றனர்.

விழுப்புரம் மற்றும் அதனை சுற்றியுள்ள திருவண்ணாமலை, கடலூர் ஆகிய 85 இலட்சத்துக்கு அதிகமான மக்கள் தொகை கொண்ட 3 மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு அரசு சட்டக்கல்லூரி ஏதும் அருகில் இல்லை என்பதாலும், சட்டம் பயில விருப்பமுள்ள இம்மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களும் சட்டம் பயில வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்திலும், அம்மாவட்ட மக்களின் நீண்ட கால கோரிக்கையினை ஏற்று, விழுப்புரம் நகரத்தில் 2017–2018–ஆம் கல்வியாண்டு முதல் புதிதாக அரசு சட்டக் கல்லூரி துவக்கப்பட்டு, 3 ஆண்டு மற்றும் 5 ஆண்டு இளநிலை சட்டப் படிப்பு மற்றும் முதுநிலை சட்டப்படிப்பு பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது.

விழுப்புரம் அரசு சட்டக் கல்லூரிக்கான உட்கட்டமைப்பு மற்றும் அத்தியாவசிய தேவைகளுக்கென 2 கோடியே 27 லட்சம் ரூபாய் ஒப்பளிப்புச் செய்தும், மாணவர்களுக்கு பாடங்களைப் போதித்திடவும் மற்றும் நிர்வாகப் பணிகளைக் கவனித்திடவும் தேவையான பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

இக்கல்லூரிக்கு சொந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்படும் வரையில், கல்லூரி தற்காலிகமாக செயல்படுவதற்கு விழுப்புரம் நகரத்தில், பழைய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் தெரிவு செய்யப்பட்டு, அக்கட்டடத்தில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, விழுப்புரம் அரசு சட்டக் கல்லூரி செவ்வனே செயல்பட்டு வருகின்றது.

விழுப்புரம் அரசு சட்டக் கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு சாலாமேடு கிராமத்தில் 1.93 ஹெக்டேர் பரப்பு நிலம் தெரிவு செய்யப்பட்டு, மாணவ, மாணவியர் விடுதிகளுடன் கூடிய நிரந்தரக் கட்டடம், 70 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தற்போது கட்டப்பட்டுள்ளது.

இக்கட்டடத்தில்,

- ❖ 24 வகுப்பறைகள்,
- ❖ சுமார் 400 மாணவர்கள் பங்குபெறும் கருத்தரங்கக் கூடம்,
- ❖ சுமார் 400 மாணவர்கள் கலந்துகொள்ளும் காணொலிக் காட்சி அறை,
- ❖ சொற்பொழிவு அறை,
- ❖ மாணவ, மாணவிகளுக்கென தனித்தனி ஓய்வு அறைகள்,
- ❖ கணினி ஆய்வகம்,
- ❖ உள்விளையாட்டரங்கம் மற்றும்
- ❖ சர்வதேச தரத்தில் மாதிரி நீதிமன்ற அரங்கம், நவீன தரத்தில் கல்லூரி அலுவலகம் மற்றும் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய நிர்வாகத் தொகுதிக் கட்டடங்கள்,
- ❖ அதிவேக இணைய வசதிகளுடன் கூடிய கம்பியில்லா மண்டலம் அடங்கிய நூலகக் கட்டடங்கள் மற்றும்
- ❖ கலையரங்கம் ஆகியவை கட்டப்பட்டுள்ளன.

தற்போது, இக்கல்லூரியில், மூன்றாண்டு சட்டப் படிப்பில், 240 மாணவர்கள், 5 ஆண்டு சட்டப்படிப்பில் 240 மாணவர்கள், முதுநிலை சட்டப்படிப்பில் 20 மாணவர்கள் என மொத்தம் 500 மாணவர்கள் இந்த கல்லூரியிலே சட்டம் பயின்று வருகின்றனர்.

சட்டம் பயிலும் மாணவர்களுக்கு, வழக்கறிஞர் பணி மற்றும் நீதித் துறையினைத் தவிர, உலகமயமாக்கலின் சூழலால் வணிகச்சட்டம், சுற்றுச்சூழல் சட்டம், தகவல் தொழில் நுட்ப சட்டம் ஆகிய துறைகளில் வேலை வாய்ப்புகளும்,

வங்கி மற்றும் நிதி சார்ந்த துறைகளில் சட்ட வல்லுநர்களின் தேவை அதிகமாக உள்ளதால், வங்கி மற்றும் பன்னாட்டு நிறுவனங்களில் வேலை வாய்ப்புகளும், குடிமைப் பணிக்கான போட்டித் தேர்வு, அரசுத் துறைகளுக்கு போட்டித் தேர்வுகளிலும் தேர்வு செய்யப்பட்டு, வேலை வாய்ப்புகளை அள்ளித் தரும் அட்சய பாத்திரமாக சட்டப் படிப்பு இன்றைக்கு மாறி வருகின்றது.

தற்போது மாறிவரும் சூழலுக்கு ஏற்ப புதிய சட்டங்கள் மற்றும் அவ்வப்போது மேற்கொள்ளப்படும் சட்ட திருத்தங்கள் ஆகியவற்றை மாணவர்கள் கல்லூரியில் பயிலும் போதே உடனுக்குடன் தெரிந்து கொள்ள ஏதுவாக ஒவ்வொரு கல்லூரியிலும் அதிநவீன வசதியுடைய இணைய வசதிகள், நவீன நூலகங்கள் மற்றும் சர்வதேச தரத்திலான மாதிரி நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டு, மாணவர்களது வழக்காடும் திறமையை மேம்படுத்திட பல்வேறு வசதிகளை ஏற்படுத்தி அரசு தரமான சட்டக் கல்வியினை வழங்கி வருகிறது.

⇒ **''கல்லூரிகளில் 50 சதவீதத்தினருக்கும் மேல் கல்வி, பயில வகை செய்தல் எனது நோக்கமாகும்''** என்ற மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழ்நாட்டில் 65 கல்லூரிகளை துவக்கினார்கள். மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த அம்மாவின் அரசும், 12 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை துவக்கியுள்ளதுடன், 5 பாலிடெக்னிக் கல்லூரிகளையும் தமிழகத்திலே துவக்கியது. **இதன் காரணமாக, உயர் கல்வியில் சேரும் மாணாக்கர்கள் சதவீதம் 49 என உயர்ந்து, இந்தியாவிலேயே உயர் கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக இன்று விளங்கி வருகிறது.**

⇒ உயர் கல்வி நிறுவனங்களுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதில் மாண்புமிகு அம்மாவின் அரசு மிகுந்த கவனம் செலுத்தி பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், விழுப்புரத்தில் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக் கழக உறுப்புக் கல்லூரிக்கு புதிய கட்டடம் கட்டும் பணி 4.84 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

⇒ 2017–18ஆம் கல்வியாண்டில் டாக்டர் எம்.ஜி.ஆர். அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்கப்பட்டு, தற்காலிக கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்கல்லூரிக்கென நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு 7.98 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடப் பணிகள் முடிவுற்று, கல்லூரியில் இன்று முதல் வகுப்புகள் துவங்கப்பட உள்ளன என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

⇒ இந்த இனிய நாளில் கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

⇒ தமிழ்நாட்டில் விரைந்து வளர்ச்சியடைந்து வரும் நகராட்சிகளில் சென்னை – திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள விழுப்புரம் நகராட்சியும் ஒன்றாகும்.

⇒ இந்நகராட்சி 1.10.1919 அன்று மூன்றாம் நிலை நகராட்சியாகத் தொடங்கப்பட்டு, 2.3.1988 அன்று முதல் தேர்வுநிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, கடந்த 30.9.2019ல் நூற்றாண்டு நிறைவு பெற்றது. வரலாற்று சிறப்பு மிக்க நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடும் விழுப்புரம் நகராட்சி நிர்வாகம் மற்றும் பொது மக்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நல்வாழ்த்துகளை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

⇒ இந்தியாவில் அதிக நகரமயமான பெரிய மாநிலங்களில் தமிழ்நாடு முதன்மையான மாநிலமாக திகழ்கிறது. அதற்கு முக்கியக் காரணம், மாண்புமிகு அம்மா அவர்களின் தொலைநோக்கு சிந்தனையும், திட்டங்களும் தான். மாண்புமிகு அம்மாவின் அரசு பொறுப்பேற்றதில் இருந்து, நகராட்சி உட்கட்டமைப்புகளை மேம்படுத்துவதில் மிகுந்த சிரத்தை எடுத்து பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில்,

- விழுப்புரம் நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டங்கள், இதர திட்டங்கள் மற்றும் மாநகராட்சி பொது நிதியின் கீழ், 17.40 கி.மீ. நீளத்திற்கு 9.22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 46 சாலைப் பணிகள்,

- 29.50 லட்சம் ரூபாய் செலவில் தெரு விளக்குகள் அமைக்கும் பணிகள்,

- 83 லட்சம் ரூபாய் செலவில் 49 ஆழ்துளைக் கிணறுகள்,

- 1.52 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளுக்கான வாகனம்,

- 4.70 கோடி ரூபாய் செலவில் குப்பையில் இருந்து உரம் தயாரிக்கும் பணிகள்,

- 3.49 கோடி ரூபாய் செலவில் பயோ–மைனிங் முறையில் உரக் கிடங்கில் உள்ள குப்பைகளை இறுதியாக்கம் செய்து அகற்றும் பணிகள் ஆகியவை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

⇒ ஏற்கனவே நான் சட்டப் பேரவை விதி 110–ன்கீழ் 18.7.2019 அன்று அறிவித்தவாறு, வரலாற்று சிறப்பு மிக்க நூற்றாண்டு விழா கொண்டாடும் விழுப்புரம் நகராட்சி புதிய அலுவலகக் கட்டடம் கட்டுதல், காய்கறி சந்தை அமைத்தல், பழைய பேருந்து நிலையத்தை மேம்பாடு செய்யும் பணி, புதிய சாலைகள், வடிகால் வசதிகள், தெரு விளக்குகள் ஆகியவற்றை அமைக்கும் பணிகள், நகராட்சி பகுதிகளில் குளங்கள், பூங்காக்களை மேம்படுத்தும் பணி போன்ற பணிகளுக்காக சிறப்பு நிதியாக மாண்புமிகு அம்மாவின் அரசு 50 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது என்பதை இத்தருணத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது தவிர, இன்று விழுப்புரம் மாவட்டத்தில் சட்டத் துறை, உயர் கல்வித் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த 92.06 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவடைந்த 29 பணிகளை திறந்து வைத்தும், 278.53 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 541 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் உள்ளேன்.

கல்லூரி மாணவர்களுக்கு கல்வி போதிப்பது என்பது சவாலான காரியம்தான் என்றாலும், சட்டக் கல்லூரி ஆசிரியராகிய நீங்கள் வெறும் வகுப்பறை ஆசிரியராக மட்டுமல்லாமல், மாணவர்களின் உற்ற தோழனாகவும், நல்ல வழிகாட்டியாகவும், சிறந்த முன்மாதிரியாகவும் இருந்து அவர்களை நெறிப்படுத்த வேண்டும்.

சட்டக் கல்லூரியின் மாணவர்களாகிய நீங்கள் தான் வருங்காலத்தில் நீதியையும் சட்டத்தையும் பாதுகாக்க வேண்டியவர்கள். எனவே, மாணவப் பருவத்தில் இருக்கும் நீங்கள் எவ்வித கவனச் சிதறலுக்கும் இடம் கொடுக்காமல், கல்வியில் முழு கவனத்தையும் செலுத்தி, வருங்காலத்தில் சிறந்த வழக்கறிஞர்களாகவும், நீதிமான்களாகவும் உருவாக வேண்டும் என உங்களை எல்லாம் வாழ்த்துகின்றேன்.

வருங்காலத்தில் சிறந்த நீதிபதிகளாக உருப் பெறவுள்ள நீங்கள், உங்களிடம் வரும் வழக்குகளை நன்கு ஆராய்ந்து, சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் என்ற கொள்கையினை கடைபிடித்து சிறந்த தீர்ப்புகளை வழங்கி, நீதியை நிலை நிறுத்த வேண்டும் என்று அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே நான் சொன்ன அனைத்து திட்டங்களுமே, இந்த மாவட்டத்தின் மண்ணின் மைந்தர் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் திரு. சி.வி. சண்முகம் அவர்கள், ஒவ்வொரு முறையும் என்னை சந்திக்கின்ற போது, ஏதாவது ஒரு கோரிக்கை வைப்பார். சட்டக் கல்லூரி அமைக்க கோரிக்கை வைத்தார். அதற்கு மேலாக, விழுப்புரம் நகராட்சி நூற்றாண்டு விழாவை கொண்டாட சிறப்பு நிதி

வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். அவருடைய கோரிக்கையினை ஏற்று சட்டமன்றத்திலே நூற்றாண்டு விழா காணுகின்ற விழுப்புரம் நகராட்சிக்கு சிறப்பு நிதியாக ரூபாய் 50 கோடி ரூபாய் நான் அறிவித்தேன்.

மேலும், இந்த மாவட்டம் வளர்வதற்கும், இந்த மாவட்டத்திலே இருக்கின்ற மாணவச் செல்வங்களுக்கு சிறந்த கல்வி கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே மரியாதைக்குரிய சட்டத்துறை அமைச்சர் அவர்கள் சிறப்பாக செயல்பட்டு கொண்டு இருக்கிறார். இந்த மாவட்டத்தை பொறுத்தவரைக்கும், கிராமங்கள் நிறைந்த பகுதி, விவசாயிகள் நிறைந்த பகுதி. ஆகவே, அல்லும் பகலும் அயராது உழைக்கின்ற அந்த விவசாயிகளுடைய குழந்தைகள் சட்டம் பயில வேண்டும், உயர்கல்வி பயில வேண்டும் என்பதற்காகத் தான் இவ்வளவு செலவு செய்து, இவ்வளவு அற்புதமான கட்டிடத்தை உங்களுக்கு கொடுத்து, சட்டம் பயில்வதற்கு அரசு துணை நிற்கின்றது. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலவும் துணை நிற்கின்றது. நீங்கள் சிறப்பான கல்வி கற்று, நீங்கள் உயர்ந்த நிலைக்கு எட்ட வேண்டும். நாட்டிற்கு வீட்டிற்கும் நல்லது செய்ய வேண்டும் என்று வாழ்த்தி, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்,

நன்றி! வணக்கம்.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**